
உ

ஸ்ரீ நேத்ர விநாயகர் துணை
ஸ்ரீ ஸ்வாமிநாத ஸ்வாமி ஸஹாயம்

**"சிவனார் மனங்குளிர உபதேச மந்திரம்
இரு செவிமீது பகர்ந்தருளிய குருநாதா"**








ஊருஹஸ்தம் தண்டபாணிம் மௌஞ்ஜீம் கௌபீன தாரிணம்
சுக்லய்க்ஞோபவீதாந்த பக்த கிருஷ்ணாஜினம் வரம்
ஸிந்தூராருண வர்ணஞ்ச ஸதாபக்த சிகோஜ்வலம்
பக்தாபீஷ்ட ப்ரதம் வந்தே ஸ்வாமிநாதம் சிவாத்மஜம்


## 42 ஆம் வருஷத்திய
## ஸ்ரீ மஹா ருத்ராபிஷேக பத்திரிகை

# 70 ஆம் வருஷத்திய திருப்புகழ் திருப்படித் திருவிழா

**சுவாமிமலை**

| 1.8.2026 சனி | & | 2.8.2026 ஞாயிறு |
|---|---|---|

முருகா முருகா முருகா முருகா முருகா முருகா



உ

முருகா ஓம் சரவணபவா

பெருத்த பாருளீர்!

தமிழ்க் கடவுளென்றும், குறிஞ்சி நில இறைவன் என்றும் உலக மாந்தரால் கனிவுடன் தொழுதேத்தப்படும் திருமுருகப் பெருமானின் அருள் தேங்கிய திருமேனி கோயில் கொண்டு எழுந்தருளா நிற்கும் ஆறுபடை வீடுகளுள் நான்காவது படைவீடு என்றும் அனாஹத க்ஷேத்திரமென்றும் அழகிய திருவேரகம் என்றும் சிறப்புப் பெயர்கள் பற்பல பொருத்தப் பெற்றதுமான சூதமி கவளர் சோலைமருவு சுவாமிமலையில் அண்ட சராசரங்கள் அனைத்தையும் ஆட்கொண்டு, ஈரேழு உலகனைத்துமுள்ள தமது அடியார்கள் அனைவர்க்கும் மிகுந்த கனமதுர நீள்சௌக்ய சகல செல்வயோக மிக்கபெருவாழ்வும், தகைமை சிவஞான முக்தி பரகதியும் கொடுத்து உதவும் வடிவேலன் ஸ்ரீ சுவாமிநாத ஸ்வாமியின் திருவருள் துணை நிற்க, காஞ்சி காமகோடி பீடம் மஹா பெரியவாள் ஸ்ரீஸ்ரீஸ்ரீ ஜகத்குரு சங்கராச்சார்ய சுவாமிகள் அவர்களுடைய பரமானுக்ரஹத்துடன் நிகழும் பராபவ வருடம் ஆடி மாதம் 16 ம் தேதி 1.8.2026 சனிக்கிழமை ஓம் எழுத்திலன்பு மிகவூறிய சுவாமியின் திருச்சன்னதியில் தக்க (121) வேத விற்பன்னர்களை கொண்டு உலகம் உய்ய மஹா ருத்ரஜபமும், ஹோமமும் மறுநாள் ஆடி மாதம் 17 ம் தேதி 2.8.2026 ஞாயிறன்று அறுபது வருடங்களைப் படிக்கட்டுகளாக ஏற்றுக்கொண்ட இளைய பிள்ளையார் ஸ்ரீ ஸ்வாமிநாத ஸ்வாமியின் 70 ம் ஆண்டு திருப்படித் திருவிழாவும் மஹாபிஷேகமும் நடத்த அவன் அருளால் அவன் தாள் வணங்கி நிச்சயிக்கப் பெற்றிருக்கிறது. சுராதிபதி மாலயனுமாலோடு சலாமிடும் சுவாமிமலை பெருமானுக்கு உகந்த இவ்விழாக்களில் அன்பர்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்புற நடத்தித்தந்து கடகபுயமுது ரத்ன மணியணி பொன்மாலை செச்சை கமழுமணியார் கடப்பம் அணியும் அழகிய திருவேரக சிவஸ்கந்தன் ஸ்வாமிநாதன் திருவருள் பெற்றுய்ய உவந்தழைக்கின்றோம்.

சுவாமிமலை
**10.6.2026**

இப்படிக்கு
**சுவாமிநாத சுவாமி பக்தர்கள்**

முருகா முருகா முருகா முருகா முருகா முருகா

ஓம் சரவணபவா

# நிகழ்ச்சி நிரல்

## 1.8.2026 சனிக்கிழமை

பராபவ வருடம் ஆடி மாதம் காலை 6.00 மணிக்கு

| | |
|---|---|
| 16 ம் தேதி த்ருதியை திதி | ஸ்ரீ மஹா கணபதி ஹோமம் |
| சதய நக்ஷத்திரம் | (ஷோடச திரவியம்) |
| காலை 9.00 மணிக்கு | ஸ்ரீ மஹாருத்ரஜபம் ஸங்கல்பம் |
| காலை 10.00 மணிக்கு | ஜப ஹோமங்கள் ஆரம்பம் |
| பகல் 1.00 மணிக்கு | பூர்ணாஹுதி, மந்திரபுஷ்பம், தீபாராதனை |
| மாலை 6.00 மணிக்கு | ருத்ர க்ரம அர்ச்சனை |
| இரவு 7.30 மணிக்கு | ஸ்ரீ சுவாமிநாதஸ்வாமி தங்கரதம் புறப்பாடு |
| இரவு 8.30 மணிக்கு | ஸ்ரீ மூலவருக்கு தங்க கவச அலங்காரம் தரிசனம் சத்ரு ஸம்ஹார த்ரிசதி அர்ச்சனை, புஷ்பாபிஷேகம், தீபாராதனை |

## 2.8.2026 ஞாயிற்றுக்கிழமை

பராபவ வருடம் ஆடி மாதம் காலை 9.00 மணிக்கு

| | |
|---|---|
| 17 ம் தேதி சதுர்த்தி திதி | ஸ்ரீ மஹா ருத்ர ஜபம் ஆரம்பம் |
| பூரட்டாதி நக்ஷத்திரம் | |
| காலை 10.00 மணிக்கு | திருப்புகழ் திருப்படித் திருவிழா ஆரம்பம் |
| பகல் 12.00 மணிக்கு | வஸோர்த்தாரை பூர்ணாஹுதி தீபாராதனை |
| பகல் 1.00 மணிக்கு | மஹாபிஷேகம் அலங்காரம் தீபாராதனை |

## குறிப்பு

விசாகம், அனுஷம், புனர்பூசம், பூரட்டாதி, பூசம், உத்திரட்டாதி நக்ஷத்திரம் உடையவர்கள் மஹாருத்ர ஜப ஸங்கல்பத்தில் கலந்துகொண்டு பயன் பெற வேண்டுகிறோம்.